**மத்திய சுற்றாடல் அதிகாரசபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் காரணமாக அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) வழியில்நின்ற இருப்பு மீதியில் நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 8,054,407 தொகை மற்றும் செலுத்துதல் மேற்கொள்ளப்படாதிருந்த 17 விடயங்களுக்குரிய ரூபா 8,856,689 தொகை, வழியில் நின்ற இருப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2021 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு வழியில்நின்ற இருப்பு மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,430,000 பெறுமதியான 03 வளிப்பதனாக்கி இயந்திரங்களின் பெறுமதி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழியில்நின்ற இருப்புக் கணக்கின் மீதியிலிருந்து அகற்றப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட வழியில்நின்ற இருப்பு மீதியின் பெறுமதி ரூபா 18,341,096 அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது உரிய பிரகாரம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழியில்நின்ற இருப்புக் கணக்கின் மீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட காணியொன்றுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட வட்டி | 2022 ஆம் ஆண்டின் போது இந்த கொடுப்பனவுகள் தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணமான ரூபா 17,770,995 இற்காக நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. அதனால் ஆண்டின் பற்றாக்குறை மேற்கூறப்பட்ட பெறுமதியால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டது. | | |
| (இ) | 2004 ஆம் ஆண்டு முதல் கூட்டுப்பசளை பாத்திரங்கள் விற்பனை செய்யப்பட்டதால் கிடைத்த பணத்தில் வருமானக் கணக்கில் செலவு வைக்க வேண்டிய அளவை இனங்காணமல் ரூபா 7,887,531 மீதியொன்று நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் கூட்டுப்பசளை பாத்திர ஒதுக்கமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டியதாக இருந்த போதிலும் தவறினால் ஒதுக்கமாக இனங்காணப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுகளின் கணக்குகளை பரீட்சித்து இந்த கணக்குகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இறுதிக் கணக்குகளில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமணாக் கோவையின் நிதிப் பிரமாணம் 751 | மீளாய்வாண்டில் ரூபா 15,434,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட நான்கு டிறக்டர்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | இந்த டிறக்டர்கள் ரட்ட சுரக்கிமு கங்கா சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அந்த நிகழ்ச்சித் திட்டம் மற்றும் தொடர்புடைய நோக்கங்கள் மற்றும் ஈடுபடுகின்ற மூன்றாம் தரப்பினருக்கு வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதனால் அதிகார சபையின் நிலையான சொத்தாக காண்பிக்கப்படவில்லை. | டிறக்டர் வண்டிகளை கையளிப்பதற்கும், கையளிக்கும் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் 24(ஈ) – 2(1) ஆம் பிரிவு | சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசம் பௌதீக திட்டமிடல் வழங்கல் தொடர்பாக அதிகார சபை பொறுப்பாக இருக்க வேண்டியமை காண்பிக்கப்பட்ட போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளியிடப்பட்டிருந்த 05 சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களுக்கு உரிய சுற்றாடல் பாதுகாப்பு பிரதேச முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த 05 பிரதேசங்களுக்கும் முகாமைத்துவக் குழு தாபிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்க வில்லை. தேவையான சந்தர்ப்பங்களின் போது சுற்றாடல் பாதுகாப்பிற்கு உரியதான சகல தரப்பினரிடமும் கூட்டங்கள் நடாத்தி பொருத்தமான தீர்மானம் எடுக்கப்படுகின்றது. | சுற்றாடல் பாதுகாப்பு பிரதேச முகாமைத்துவக் குழு தாபிக்கப் பட்டதன் பின்னர் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் 111 ஆம் பந்தி | சுரக்கிமு கங்கா தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்திற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித் திட்ட முகாமையாளருக்கு 2021 ஏப்ரல் மாதம் முதல் திசெம்பர் வரை மாதாந்த சம்பளம் மற்றும் எரிபொருள் படியாக ரூபா 170,000 வீதம் செலுத்தப்பட்டிருந்த துடன் இதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை | இந்த படிகள் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக அமைச்சரவை குறிப்பு 2022 செப்தெம்பர் 27 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் குறிப்பில் திருத்தங்கள் சில அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் திருத்தப்பட்ட அமைச்சரவை பத்திரம் 2021 திசெம்பர் 20 ஆந் திகதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | கொடுப்பனவு மேற்கொள்வதற்கு முன் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ஈ) | கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் 2022 சனவரி 25 ஆந் திகதிய 04/2022 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(அ) பந்தி | அதிகார சபைக்குரிய 03 வாகனங்களை அகற்றுவதற்காக முன்மொழியப்பட்டிருந்த போதிலும் 2022 மே 15 ஆந் திகதி வரையிலும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க | அகற்றுவதற்கான மூன்று வாகனங்களில் இரண்டு வாகனங்களின் வாகன சட்டத்தில் ஏற்பட்ட (Chassis) பாதிப்பின் காரணமாக உடைந்த பொருட்களாக அகற்றுவதற்கு மோட்டார் போக்குவரத்து | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வில்லை. | திணைக்களத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. அந்த அனுமதி கிடைத்த பின்னர் வாகனங்கள் மூன்றும் அகற்றப்படும். | |
| (உ) | கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் 2022 சனவரி 25 ஆந் திகதிய 04/2022 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(ஆ) பந்தி | அதிகார சபைக்குரிய 04 வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிறுவனத்தில் 07 சாரதி வெற்றிடங்கள் காணப்பட்டன. வெற்றிடங்களுக்காக சாரதிகளை ஆட்சேர்த்ததன் பின்னர் சாரதிகள் அந்த வாகனத்திற்காக நியமிக்கப்படுவர். தற்போது அதிகார சபையில் சகல சாரதி பதவியணியினர்களுக்கும் ஒரு வண்டி வீதம் நியமிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 25 மாவட்ட அலுவலகங்களுக்குரிய 21 வங்கிக் கணக்குகளில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 201,109,015 மீதி அதிகார சபையின் பிரதான வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் 18 அலுவலகங்களினால் சேகரிக்கப்பட்ட வருமானம் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 21 கணக்குகளின் மீதி ஒவ்வொரு மாத இறுதி திகதியிலும் உள்ளவாறு தலைமை அலுவலகத்தின் இலங்கை வங்கி கணக்கிற்கு மாற்றுமாறு அந்தந்த வங்கிக்கு நிலையான கட்டளை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள மீதி மாற்றப்படாதிருந்தமை தொடர்பாக வங்கியுடன் கலந்துரையாடி எதிர்காலத்தில் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மாவட்ட அலுவலகங்களின் வங்கிக் கணக்கு மீதிகளை கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 22,121,759 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 135,512,005 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 113,390,246 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீண்டெழும் மானியங்களின் அதிகரிப்பு மற்றும் அதிகார சபையின் வருமானத்தில் அதிகரிப்பு என்பன பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சுரக்கிமு கங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களுக்கு முரணாக அந்த நிதியேற்பாட்டை பயன்படுத்தி ரூபா 2,030,000 செலவில் Electric Cart வண்டியொன்று கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | புனித பூமியில் பிரயாணம் செய்கின்ற மோட்டார் வாகனங்களிலிருந்து வெளியிடப்படுகின்ற புகையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வளி மாசுறுதலின் காரணமாக நீர் மாசுபட முடியமாக இருந்தமையால் அந்த நிலைமையை குறைப்பதற்காக கதிர்காமம் நிலமெத்தும மற்றும் அரசாங்க அதிபரின் கோரிக்கையின் படி றுஹுணு மகா தேவாயல வளவில் வளி மாசுறுவதை குறைக்கும் மாதிரி செயற்திட்டமாக சுற்றாடல்களுக்கு சாதகமான மின்சார சக்தியில் அமுல்படுத்தப்படுகின்ற இந்த வாகனம் (Electric Cart) வழங்கப்பட்டிருந்தது. | நோக்கங்களுக்கு முரணாக தீர்மானம் எடுத்து கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை எடுத்த உத்தியோகத் தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகார சபைக்கு 50 வருடங்களில் குத்தகை அடிப்படையில் 2000 ஆம் ஆண்டில் மேலதிகமாக பெறப்பட்ட 129.88 பேர்ச் காணி பகுதி 19 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக உரிமை கோரப்பட்டிருந்த போதிலும் உரிய வரித் தொகை செலுத்தி சட்டரீதியாக கையேற்கப்பட்டிருக்க வில்லை. இந்த காணிப் பகுதி சட்டரீதியாக கையேற்கப்படாமையினால் அதில் 20 பேர்ச் காணிப் பகுதி நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மின்சார சபைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தமையினால் அதிகாரசபைக்கு அந்த காணியின் அளவு உரித்தற்று போயிருந்தது. | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேலதிகமாக 03 றூட் 9.88 பேர்ச் காணிக்கு செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக பொது திறைசேரியிலிருந்து நிதி கோரப்பட்டிருந்த போதிலும் கிடைத்திருக்கவில்லை. கொடுப்பனவுகளை மேற்கொண்டு காணியை மாத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தற்போது ரூபா 10,397,822 தொகை செலுத்தப்பட்டுள்ளது. மிகுதி தொகையையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | காணிப் பகுதிகளை சட்ட ரீதியாக கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) 2021 ஆம் ஆண்டில் சுற்றாடல் அமைச்சின் வரைவு ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அதிகார சபையின் Eco Club Materials and EPP Materials இன் செயல்முன்னேற்றத்திற்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட 15 விடயங்களில் உள்ளபடியாக நிறுவனத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அளவிற்கு இடையே 387,523 அலகுகள் வேறுபாடு காணப்பட்டது. | 2019 முதல் கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் சீரற்ற பொருளாதார சிக்கல்களின் காரணமாக பாடசாலை முறைமைகள் செயலிழந்திருந்தது. தொலைக்கல்வி வழிகாட்டி முறைமையில் பல்வேறு சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்ட போதிலும் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு முடியாமையால் சான்றிதழ் பத்திரம், குறிப்பு புத்தகம், பதக்கம் மற்றும் ஏனைய பொருட்களை பகிர்ந்தளிப்பதற்கு முடியாதிருந்தது. இதனால் | தேவைக்கு மாத்திரம் அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுத்து அவற்றை திட்டமிடப்பட்ட பிரகாரம் பகிர்ந்தளிப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்கள் கையளிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இந்த விடயங்களின் மிகை தற்போது அதிகார சபையில் உள்ளது. | |
| (இ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் கணக்காய்வு திகதி வரையிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை. | சட்ட வரைவு திணைக்களத்திலிருந்து தேசிய சுற்றாடல் சட்ட வரைவு செய்யப்பட்ட அவதானிப்புக்கள் அதிகார சபையினால் சட்ட வரைவு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி சட்டங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பிலிசறு செயற்திட்டத்தினால் அதிகார சபைக்கு 2018 திசெம்பர் 06 ஆந் திகதி வழங்கப்பட்ட மூன்று வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகார சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சுற்றாடல் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தகவல்களை சேகரிக்கும் நோக்கில் ரூபா 1.39 மில்லியனுக்கு 2020 திசெம்பர் 15 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட டிறோனர் இயந்திரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எந்தவொரு செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் விரைவாக வாகனங்களை கையேற்கு நடவடிக்கை எடுப்பதை கண்காணிக்கப்படும் என அறியத்தருகின்றோம். சுற்றாடல் அதிகார சபையில் டிறோனர் இயந்திரத்தை செயற்படுத்தக்கூடிய மனிதவளம் காணப்படவில்லை. விமானப் படையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவின் விளைவாக இந்த டிறோனர் இயந்திரம் கொள்வனவு செய்ய வேண்டியேற்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 08 ஆந் திகதி இரு தரப்பினருடன் சட்ட உத்தியோகத்தரையும் உள்ளடக்கிய 02 குழுக்கள் இந்த இயந்திரத்தை செயற்படுத்துவது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையை அபிவிருத்தி செய்வதற்கும், மிகுதி நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டிருந்தது . அபிவிருத்தி செய்யப்பட்ட உடன்படிக்கை இலங்கை | 03 வாகனங்களை கையேற்பதற்கும், சொத்துக்கள் குறைவாக பயன்படுத்தும் நிலைமையை தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | விமானப் படையின் இணக்கப்பாட்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக தற்போது விமானப் படை மிகுதி நடவடிக்கைகளை எடுக்கின்றது. இது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளை செய்தல் இந்த அதிகார சபையினால் நிரந்தரமாக மேற்கொள்ளப்படுகின்றது. | |

**3.4 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் விடய இலக்கம் 2.3.3 இன் கீழ் அதிகாரசபையின் சகல ஆய்வுகூடங்களுக்காகவும் Procurement of consumables glassware chemicals and safety requirements கொள்வனவு செய்வதற்காக 2 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஏதேயொரு தாமதம் ஏற்பட்டிருந்தது. கட்டளையிடப்பட்ட உபகரணங்கள் பகுதியாக ஆய்வுகூடத்திற்கு கிடைக்கின்றது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.5 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 60 மரம் வெட்டும் இயந்திரங்கள் ரூபா 1,083,333 தொகையில் (Bush cutter) 2021 திசெம்பர் 27 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2022 ஏப்ரல் 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 55 இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் 04 | எதிர்காலத்தில் முறையான பிரகாரம் சுரக்கிமு கங்கா பிரதேச குழுவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கோரிக்கைளின் பிரகாரம் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான திட்ட முறைமையின் அடிப்படையில் செயற்திட்ட நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் உபகரணங்களைபப கிர்ந்தளித்து அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் |

| | | |
|---|---|---|
| மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | | வேண்டும். |
| (ஆ) 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 7,420,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட சுற்றாடல் வழிகாட்டல் தொப்பிகளில் 84.53 சதவீதம் அதாவது ரூபா 6,272,000 பெறுமதியான தொப்பிகள் 2022 மார்ச் 18 ஆந் திகதி வரையிலும் உரிய பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை | நாடு வழமையான நிலைக்கு வரும்போது மேற்கூறப்பட்ட இருப்புக்களை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவைகளை சரியாக உறுதிப்படுத்திய பின்னர் கட்டளையிட்டு திட்டமிடப்பட்ட பிரகாரம் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் அது தொடர்பான பொறுப்புக்கள் உத்தியோகத்தர் களுக்கு கையளிக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்படுகின்ற அச்சிடல் பொருட்களின் பற்றாக்குறை காரணமாக இந்த ஆண்டறிக்கை சமர்ப்பிப்பதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. | ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |